DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No. 106/2026

Deposition of PW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சரவணன் |
| Father's Name | : | மதுரை வீரன் |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of Aug 2026.

எதிரி ஆஜர் இல்லை. BNSS 355ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை –இரண்டாவது முறை:

எனது நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான Form C நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் ம.சா.ஆ.6 ஆகும்.** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). எனது நிறுவனத்தின் புதுப்பித்தலுக்கான கட்டண இரசீது நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் ம.சா.ஆ.7 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).** எனது நிறுவனத்தின் உரிமத்தின் நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் ம.சா.ஆ.8 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).** எங்கள் நிறுவனத்தின் 13.09.2025க்கான பரிவர்த்தணை பதிவேடு நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் ம.சா.ஆ.9 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).** எங்கள் நிறுவனத்தின் பங்குத்தாரர்கள் வழக்கு தாக்கல் செய்வதற்காக எனக்கு அளித்த அதிகாரம் மற்றும் ஒப்புதல் சான்று நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் ம.சா.ஆ.10 ஆகும். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

குறுக்கு விசாரணை

1. ம.சா.ஆ.6 ல் பார்டனர் சிப் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிறுவனத்தின் பங்குத்தாரர் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ல் Money lending என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் நிறுவனத்தின் பெயருடன் Non Banking Financial Company என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். எனது நிறுவனத்தின் பங்குத்தாரர் பத்திரத்தை பார்த்தால்தான் நிறுவனத்தின் உண்மையான நிலவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 ஆன ஆவணமானது 2021 ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் Partnership firm or Non Banking Financial Company என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் மேற்படி பங்குத்தாரர் நிறுவனத்தின் பதிவு எண் ம.சா.ஆ.7 ல் குறிப்பிட்டபடி இல்லை என்றால் சரிதான். Money lending என்ற உரிமம் சரவணன் என்ற தனிநபருக்குதான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதில் கஜானா பைனான்ஸ் என்று தொழில் பெயராகதான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) ம.சா.ஆ.8 தவிர Money lending சம்மந்தமாக கஜானா பைனான்ஸ் என்ற பெயரில் வேறு சான்றிதழ் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 2025–2026 காலக்கட்டத்தில் நான் புதிய உரிமம் பெறவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் எனது பங்குதாரரின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் எனது பெயர் பங்குதாரரின் இயக்குனர் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. பழைய சட்டத்தின் படி ஒரு நிறுவனம் Money lending செய்ய வேண்டும் என்றால் மேற்படி நிறுவனத்தின் பெயரில்தான் உரிமம் பெறவேண்டும் என்றால் நிறுவனத்தின் பெயரில்தான் பெற்றுள்ளது. 2025 ஜூன் மாதத்திலிருந்து நான் தாக்கல் செய்த உரிமம் காலவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 ல் பங்கு உரிமம் பத்திரத்தின் எண் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ல் தேதி மற்றும் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ல் வழக்கு எண் குறிப்பிடவில்லை என்றால் பொதுவாக அனைத்து வழக்குகளுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.10 ல் முன்

மொழிந்தவர்கள், வழி மொழிந்தவர்கள் மற்றும் தயாரித்தவர்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் பங்குதாரர்களின் விபரம் குறிப்பிட்டுள்ளது. ம.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள நபர்கள் என்ன பொறுப்பில் உள்ளார்கள் என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் அவர்கள் பங்குதாரர்கள் ஆகும். மேற்படி விபரங்கள் குறிப்பிடாத நிலையில் ம.சா.ஆ.10 ஆனது செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல.

3. எங்கள் நிறுவனத்தின் மினி புத்தகம் உள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.9 ஆனது என்ன சாப்ட்வேரில் தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது. ம.சா.ஆ.9 ல் பக்க எண்கள் இல்லை என்றால் அந்த தேதியில் ஒரு பக்கம் மட்டும்தான் உள்ளது. ம.சா.ஆ.9 யை யார் பதிவு செய்வார்கள் என்றால் கணக்கு அலுவலர் பதிவு செய்வார். ம.சா.ஆ.9 யை மாற்றும் செய்யமுடியும் என்றும் அதனால் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 ல் ராமலட்சுமிக்கு பணமாக கொடுக்கப்பட்டதா அல்லது NEFT மூலம் கொடுக்கப்பட்டதா என்று குறிப்பிடவில்லை என்றால் கடன் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது. எனது நண்பர் மூலம் காசோலையை பெற்று தவறுதலாக பயன்படுத்தி எனது நிறுவனத்தின் ஆவணங்களை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஆவணங்கள் இந்த வழக்கிற்கு போதுமானதாக இல்லை என்றும், இந்த வழக்கு தள்ளுப்படி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.14 00:31:25 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam